# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1868/60 - 2014 ජුනි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.06.26

*1868/60 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2011*

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*72 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 72 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனங்களை இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து பயனுக்கு வருமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு உரித்தாக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 01,*
*2014, யூன் 26.*

***அட்டவணை***

*1. சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தின், குருவிட்ட கோரளே வடக்கு உடபத்துவே, மில்லவிட்டியவில் அமைந்துள்ள "தியரத்தம்பலே சோனா மற்றும் பிட்டிமுல்ல கும்புற" என்றழைக்கப்படும் இரண்டு அமுணம் நெல் விஸ்தீரணங் கொண்ட காணியில் பிரிபடாத அறுபத்தினான்கில் பதினொன்று (11/64) பங்குக் காணி இடப்பரப்பு முழுவதும். இதன் எல்லைகள் :-*

*வடக்கு : திக்கெடிகஹ சேனாவும் ;*
*கிழக்கு : கம்பஹா கோரளே என்ற காணியிலுள்ள அகழியும் ;*
*தெற்கு : பலிக்கட முல்லே ஓவிட்டவும், குண்ட மனன்னலாகே ஓவிட்டவும், கம்பஹா கோரளையின் பிட்டமுல்ல மற்றும் ஹிறிகும்புறவும் ;*
*மேற்கு : மில்லவிட்டிய கிராம எல்லையும் ;*

*மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் J 158 S. R. 86 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்பர் பயிர்ச் செய்கையும் உள்ளடங்கலாக.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இக்காணியானது இரத்தினபுரிக் காணிப் பதிவகத்தில் A 713/180 என்ற இலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தின், பெந்தோட்டவின் வலல்லாவிட்டகோரளை, வெலிதரையிலுள்ள பாதெகம்கொடவில் அமைந்துள்ள "விதானெ வலவ்வே வத்தே" என்ற காணியில் காணித்துண்டு A. என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டதுமான காணித்துண்டு A, இதன் எல்லைகள் :-

வடக்கு : தினெஸ் த சொய்சா முகந்திரம் என்பவருக்குச் சொந்தமான அம்பிட்டியோ வத்தவும் ;
கிழக்கு : இக்காணியின் இல. B என்னும் காணித்துண்டும் ;
தெற்கு : இக்காணியின் இல. A 7 இலக்க காணித்துண்டும் மற்றும் A 2 இலக்க காணித்துண்டும் ;
மேற்கு : மஹாதேலத்கெதர வத்தவும்.

விஸ்தீரணத்தில் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) கொண்ட காணி முழுவதும், அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், பழங்கள், கறுவாப் பயிர்ச் செய்கை மற்றும் அக்காணியில் நிற்கின்ற அனைத்தும் உள்ளடங்கலாக.

இக்காணியானது பலப்பிட்டிய காணிப் பதிவகத்தில் B 363/202 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

7 - 649

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.